# **In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

OS.No.65/2022 தேதி- 20.01.2026

(P.W.1) - ராஜரத்தினம்

குறுக்கு விசாரணை

1. இவ்வழக்கின் வாதியான கமலத்திற்கு நான் என்ன உறவு முறை என்றால் மூத்த மகன் ஆவேன். நாங்கள் எத்தனை பேர்கள் என்றால் 3 பேர்கள் ஆகும். இந்த வழக்கு பற்றி விவரம் தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கின் பிரதிவாதியான மேரி என்பவரின் கணவரான ராஜேந்திரன் என்பவருக்கு யார் சொத்து எழுதிக் கொடுத்தார் என்றால் என் தாத்தா சாமிநாதன் எழுதிக்கொடுத்தார். எவ்வளவு சென்ட் சொத்து எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் 5 சென்ட் சொத்தாகும். மேற்சொன்ன 5 சென்ட் சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண்.178/11 ஆகும். மேற்சொன்ன 5 சென்ட் எழுதிக்கொடுக்கும் முன் மொத்த விஸ்திரணம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் தெரியும் 7 சென்ட் சொத்தாகும். தற்போது மீதமுள்ள 2 சென்ட் சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் என் அம்மா கமலம் பெயரில் உள்ளது. மேற்சொன்ன 2 சென்ட் சொத்தில் என்னென்ன உள்ளது என்றால் 2 பக்கம் சுவர் உள்ளது, என் தாத்தா சாமிநாதனின் கல்லறை மற்றும் என் பாட்டி முத்தாயின் கல்லறை உள்ளது. இவ்வழக்கின் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராதில் மேற்சொன்ன 2 கல்லறை உள்ளது பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. தற்போது மேற்சொன்ன 2 சென்ட் சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் என் அம்மாவின் பெயரில் உள்ளது.

2. மேற்சொன்ன 2 சென்ட் சொத்து வரை மின் கம்பம் நடப்பட்டுள்ளது என்றால் இல்லை. மேற்சொன்ன 2 சென்ட் சொத்தின் கிழக்கு பக்கம் கேட் அமைக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. மேற்சொன்ன 2 சென்ட் சொத்தில் 4 பக்கமும் சுவர் உள்ளதா என்றால் இல்லை ஒரு பக்கம் மட்டும் தான் சுவர் உள்ளது. மேற்சொன்ன 2 சென்ட் சொத்தில் எந்த பக்கம் சுவர் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் பாதை உள்ளது. கிழக்கு பக்கம் மேற்சொன்ன கல்லறை தோட்டத்திற்கு செல்ல பாதை உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன 2 சென்ட் சொத்தைத் தொட்டு வீடு ஏதும் உள்ளதா என்றால் இல்லை. மேற்சொன்ன 2 சென்ட் சொத்தின் கிழக்கு பக்கம் வீடு உள்ளது என்றாலும் என்னுடைய கண்டத்திற்கு செல்லும் வரை பாதை உள்ளது என்றால் இல்லை. என் கண்டத்திற்கு அடுத்து ரப்பர் தோட்டம் உள்ளது என்றாலும் அதை தாண்டி கிழக்கு பக்கம் வீடு உள்ளது என்றாலும் அந்த வீட்டிற்கு சென்று வர பாதையுள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் 5 செண்ட் சொத்தை கிரையம் செய்து 1993 -ல் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2 அடி அகலத்தில் வழிப்பாதை ஏதும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

3. 2 செண்ட் சொத்திற்கு சென்று வர தடை ஏதும் செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது. என் தாத்தா 5 செண்ட் சொத்து கிரையம் கொடுத்து பின்பு எந்த ஒரு பட்டிகை சொத்தும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. கிரையம் செய்து கொடுத்த 5 செண்ட் சொத்தைப் பொருத்து எங்களுக்கு எவ்வித உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. என்னுடைய பிராதில் வசதி உரிமை சட்டத்தின் கீழ் தான் பாதை உரிமை கோரியுள்ளேன் என்றாலும் வா.சா.ஆ. 1 ஆவணத்தின் படி உரிமை கோரவில்லை என்றால் வா.சா.ஆ.1 ஆவணத்தில் பாதை வசதியை தடை செய்யக்கூடாது என்று குறிப்பு உள்ளது. மாற்று பாதை உள்ளபோது வசதி உரிமை சட்டத்தின் கீழ் எந்த உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல, வேறு வழிப்பாதை இல்லை. இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமணம் செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வழக்கு பட்டிகை சொத்தை பார்வையிட வந்தபோது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும்.

4. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் ஏ-பட்டிகை சொத்து 3.180 செண்ட் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது 3.180 செண்ட் சொத்து எங்கள் கைவசத்தில் உள்ளது என்றால் சரிதான். என் தாத்தாக்கு உரிமைப்பட்ட 7 செண்ட் சொத்தில் 5 செண்ட் சொத்தை கிரையம் கொடுத்துவிட்டார் மீதம் 2 செண்ட் சொத்து தான் உள்ளது என்ற நிலையில் 3.180 செண்ட் சொத்து எங்கள் கைவசம் எப்படி வந்தது என்றால் அதுபற்றி தெரியாது. என் நிரூபன வாக்குமூலத்தில் 3.180 செண்ட் சொத்து என்று ஏ-பட்டிகை சொத்தை திருத்தம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என் தாத்தா 5 செண்ட் சொத்து கிரையம் கொடுப்பதாக சொல்லிவிட்டு அதற்கு ஈடாக பணத்தை பெற்றுக்கொண்டு 5 செண்ட்க்கு குறைவாக தான் சொத்தை வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. எங்கள் 2 செண்ட் சொத்து போக மீதமுள்ள 1.180 செண்ட் சொத்து மேரிக்கு உரிமைப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. மேற்சொன்ன 2 செண்ட் சொத்தில் 5 கல்லறை உள்ளதாக நீதிமன்ற ஆணையர் வரைபடம் மற்றும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. அறிக்கையில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் பாதை குறித்து எந்த குறிப்பும் இல்லை என்றாலும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ள பாதை தான் எங்களுக்கு வழிப்பாதை என்றாலும் வேறு மாற்று பாதை உள்ளதால் வசதி உரிமை சட்டத்தின் கீழ் பாதை உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து கிடப்புபடி உள்ள சொத்தின் முழுவிவரம் தெரியாது என்றால் சரியல்ல. என் தாத்தா 5 சென்ட் சொத்து கிரையம் கொடுத்துவிட்டு பின்பும் சொத்தின் மொத்த விஸ்திரணத்தை குறிப்பிட்டு சொல்லாமல் கிரையம் கொடுத்த சொத்தில் 1.180 சென்ட் சொத்து அபகரித்து வைத்துக்கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல.